25.04.2015

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## "வறட்சியைத் தாங்கக் கூடிய கம்புப் பயிர் ரகங்களை வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்க வேண்டும்'

வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய கம்புப் பயிர் ரகங்களை வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்க வேண்டும் என்று கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் கு.ராமசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கம்புக்கான 50-ஆவது அனைத்திந்திய ஒருங்கிணைப்பு ஆய்வுக் கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை தொடங்கியது. சனிக்கிழமை (ஏப்ரல் 25) வரை நடைபெறும் இக்கருத்தரங்கில் 100-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொண்டுள்ளனர். இக்கருத்தரங்கில் வேளாண்மைப் பல்லகலைக்கழகத் துணை வேந்தர் கு.ராமசாமி பேசியது: இந்தியாவில் உள்ள 56 சதவீதம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு வேளாண் விஞ்ஞானிகள் சமூக அக்கறையுடன் உழைக்க வேண்டும். கம்புப் பயிரை பாதிக்கும் அடிச்சாம்பல் நோய், குலை நோய் ஆகியவற்றை எதிர்க்கவல்ல ரகங்களை உருவாக்குவது அவசியம். ஆண்டுக்கு 400 மில்லி மீட்டருக்கும் குறைவாக மழை பெறும் பகுதி, 400 முதல் 600 மில்லி மீட்டர் வரை மழை பெறும் பகுதி, 600 மில்லி மீட்டருக்கும் மேல் மழை பெறும் பகுதி என்று கம்புப் பயிர் மூன்று விதமான இடங்களில் பயிரிடப்படுகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் உகந்த, வறட்சியைத் தாங்கக் கூடிய கம்பு ரகங்களை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் முனைப்புடன் செயல்படவேண்டும்.

மாறி வரும் உணவுக் கலாசாரத்துக்கு ஏற்ப, கம்பை மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருளாக மாற்றிச் சந்தைப்படுத்தும்போது,

கம்புக்கான தேவை உயர்வதுடன், அது சார்ந்த விவசாயிகளுக்கும் போதிய வருவாய் கிடைக்கும் என்றார்.

இதில், இந்திய வேளாண் ஆய்வுக் கழகக் கூடுதல் இயக்குநர் ஐ.எஸ்.சோலங்கி, அனைத்திந்திய கம்பு ஆய்வுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ப.யாதவ், பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் ம.மகேஷ்வரன், மரபியல், பயிர் இனப்பெருக்க ஆய்வு மைய இயக்குநர் கே.கணேசமூர்த்தி உள்ளிட்டோர் இக்கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசினர். முன்னதாக, கம்பு ஆய்வுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது கே.என்.ராய்க்கும், சிறந்த ஆராய்ச்சியாளர் விருது ஓ.பி.யாதவ், சிறந்த ஆய்வு நிறுவனத்துக்கான விருது ஹரியானா வேளாண் பல்கலைக்கழகத்துக்கும், சிறந்த தனியார் நிறுவனத்துக்கான விருது பயோனீர் விதை நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டது.

**மீன் அங்காடிகள் மேம்பாட்டுப் பணி: முதல்வர் அடிக்கல்**

ரூ.3.5 கோடி மதிப்பில் மீன் அங்காடிகளை மேம்படுத்தும் பணிகளை முதல்வர் என். ரங்கசாமி வெள்ளிக்கிழமைத் தொடங்கி வைத்தார்.புதுவையில் உள்ள குபேர் மீன் அங்காடி, சின்ன கடை மீன் அங்காடி, முதலியார்பேட்டை மீன் அங்காடி, சாரம் மீன் அங்காடிகள் அரசுத் திட்ட அமலாக்க முகமை சார்பில் மேம்படுத்தப்பட உள்ளன.

இந்தப் பணிகளுக்காக, உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.3.5 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும் மேம்பாட்டுப் பணியை, முதல்வர் என்.ரங்கசாமி வெள்ளிக்கிழமை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உள்ளாட்சித் துறை அமைச்சர் பன்னீர்செல்வம், அரசு கொறடா நேரு எம்எல்ஏ மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**நவீன மீன் அங்காடி பயன்பாட்டுக்கு வருவது எப்போது?**

புதுவையில் ரூ.13.5 கோடி மதிப்பில் கட்டப்பட்டு திறப்பு விழா கண்டதோடு காட்சிப் பொருளாகவே அதி நவீன மீன் அங்காடி தொடர்கிறது. இதை விரைந்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று மீனவர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுவை கிழக்கு கடற்கரை சாலையில், நவீன சுகாதார மீன் அங்காடி மையம் கட்டப்பட்டுள்ளது. அரசு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.13.5 கோடி செலவில் இந்த நவீன மீன் அங்காடி கட்டிமுடிக்கப்பட்டது.இந்த மீன் அங்காடி கட்டடம் 37 ஆயிரத்து 886 சதுர அடியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில், மீன் வெட்டி சுத்தப்படுத்தும் அறை, மீனை கழுவி பத்திரப்படுத்தும் அறை, மீன்களை விற்பனை செய்ய குளிரூட்டப்பட்ட அறைகள் உள்ளன.தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் 110 விற்பனை கடைகள் அமைந்துள்ளன.இங்கு மீன் ஏலம் கேட்கும் இடம் தனியாகவும், குளிர்பதன வசதியுடன் மீன்களை பாதுகாப்பாக வைக்கும் இடம், கூட்டம் நடத்தும் இடம், குழந்தைகள் பாதுகாப்பு இடமும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வளாகத்தில், ஏடிஎம், உணவகம், மீன்களை பாதுகாத்து வைக்க, 10 டன் கொள்ளளவு கொண்ட பனிக்கட்டி நிலையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றிற்கான அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மீன் வியாபாரத்துக்கும், பொதுமக்கள் நுகர்வுக்கும் மிகுந்த வசதியுடன் புறநகரில் தொடங்கப்பட்ட இந்த நவீன மீன் மார்க்கெட் கட்டடத்தை கட்டி முடித்து நீண்ட நாள்களாக திறக்காமல் வைத்திருந்தனர்.இந்த நிலையில், கடந்த மக்களவைத் தேர்தல் அறிவிப்பு வரவிருந்ததையொட்டி, 2014ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திடீரென இந்த மீன் அங்காடியை முதல்வர் என். ரங்கசாமி திறந்து வைத்தார்.

ஆனால், திறந்து வைத்து ஓராண்டாகியும், இந்த மீன் அங்காடி மையம் பயன்பாட்டிற்கு வராமல் தற்போது வரை காட்சிப் பொருளாகவே தொடர்கிறது. மீன் அங்காடிகளை உரிய மீனவ பயனாளிகளைத் தேர்வு செய்து ஒப்படைப்பதில் சிக்கல் இருந்ததால் காலதாமதம் ஏற்பட்டு வந்ததாகத் தெரிவித்தனர்.இதனிடையே, இந்த மீன் அங்காடியை நடத்தவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பும் உழவர்கரை நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனாலும், ரூ.13.5 கோடி நிதியில் கட்டிமுடிக்கப்பட்ட நவீன மீன் அங்காடி இன்றும்

செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படாமல் முடங்கிக் கிடக்கிறது.

இதனை விரைந்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று மீன் வியாபாரிகளும், பொதுமக்களும் கோரிக்கைவிடுத்து வருகின்றனர்.

அதிகாரிகள் விளக்கம்: இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, நவீன அங்காடியில் இறுதிக் கட்ட சீரமைப்பு பணிகள் நடைபெறுகின்றன.கழிவுநீர் சுத்திகரிப்பு கருவிகள், குளிர்சாதன இயந்திரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெறுகின்றன. மின் சாதனங்கள் பொருத்தம், ஆழ்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.வருவாய், உள்ளாட்சி, மீன்வளத் துறை அதிகாரிகள் குழு பயனாளிகளை தேர்வு செய்து வருவதாகவும் விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என தெரிவித்தனர்.

**எல்.ஆர். பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிய கரும்பு வெட்டும் இயந்திரம்**

லிங்காரெட்டிப்பாளையம் அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.2 கோடி மதிப்பில் புதியதாக வாங்கிய கரும்பு வெட்டும் இயந்திரத்தின் சோதனை ஓட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புதுச்சேரி அருகே உள்ள லிங்காரெட்டிபாளையம் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இங்கு பதிவு செய்துள்ள 18 ஆயிரம் விவசாயிகள், 6 ஆயிரம் ஏக்கர் நிலபரப்பில் தொடர்ந்து கரும்பு பயிரிட்டு வருகின்றனர்.புதுவை, தமிழகப் பகுதியைச் சேர்ந்த இவர்கள், அரவை பருவத்தையொட்டி பல்வேறு கிராமங்களில் இருந்து டிராக்டர் மூலம் கரும்பை வெட்டி ஆலைக்கு அனுப்பி வருகின்றனர். அரவைப் பருவம் தோறும் விரைந்து கரும்பு பயிர்களை வெட்டி அனுப்புவதற்காக பிற ஆலைகளில் உள்ளதைப் போல், இந்த ஆலைக்கும் கரும்பு வெட்டும் இயந்திரம் வாங்க வேண்டும் என்று அரசிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை ஏற்று புதுவை அரசு உத்தரவின் பேரில், வேளாண்மைத் துறை மூலம், ரூ. 2 கோடி செலவில் கரும்பு வெட்டும் இயந்திரத்தை அண்மையில் வாங்கப்பட்டது. இந்த கரும்பு வெட்டும் இயந்திரத்தின் சோதனை ஓட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் வேளாண் துறை இயக்குநர் ராமமூர்த்தி, சர்க்கரை ஆலைத் தலைவர் சூரன், மேலாண் இயக்குநர் ராஜசேகர், குழு உறுப்பினர்கள் அரிபுத்திரி, ஞானசேகர், கரும்பு விவசாய சங்கத் தலைவர் செந்தில்குமார் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**காங்கயத்தில் இன்று மாவட்ட அளிவில் கால்நடை பாதுகாப்புக் கண்காட்சி**

காங்கயத்தில் மாவட்ட அளவிலான கால்நடை பாதுகாப்பு குறித்த கண்காட்சி மற்றும் சிறந்த கால்நடைகளுக்கான பரிசளிப்பு விழா ஆகியவை சனிக்கிழமை(ஏப்.25) நடைபெறவுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம், காங்கயத்தில் கால்நடைகள் கண்காட்சி நடைபெறும். பல்வேறு நிர்வாகக் காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட இக்கண்காட்சி ஏப்.25ம் தேதி) காங்கயம் என்.எஸ்.என்., திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார். கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் ஆபிரகாம் திட்ட விளக்கவுரையாற்றுகிறார். கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் சின்னையா கால்நடை கண்காட்சியினை திறந்து வைக்கிறார்..வனத்துறை அமைச்சர் ஆனந்தன் தேர்வு செய்யப்படும் சிறந்த கால்நடைகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாச்சலம் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகிறார்.

இதில் சட்டப் பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி ஜெயராமன், தமிழ்நாடு அரசு கேபிள் வாரியத் தலைவர் ராதாகிருஷ்ணன், ஈரோடு மக்களவை உறுப்பினர் செல்வக்குமார சின்னையன், காங்கயம் சட்டப் பேரவை உறுப்பினர் பங்கேற்க உள்ளனர்.

**வடமாவட்டங்களில் கனமழை வாய்ப்பு**

தமிழகத்தின் பல வடமாவட்டங்களில் சனிக்கிழமை கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நிலநடுக்கோட்டு இந்திய பெருங்கடல் - தெற்கு அந்தமான் கடல் ஒட்டிய பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகம் புதுவையின் அனேக இடங்களில் சனிக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். மேலும் சேலம், தருமபுரி, நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் கனமழையோ மிக கனமழையோ பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேர நிலவரப்படி, பழனியில் 70 மி.மீ. மழையும் பெருந்துறை, சேலத்தில் 60 மி.மீ. மழையும் பெய்துள்ளது. தருமபுரி (40 மி.மீ.), ஒகேனக்கல், கோவை (30 மி.மீ.), அவிநாசி, சத்தியமங்கலம், தேன்கனிகோட்டை, அரூர் (20 மி.மீ.), பவானி, ஓமலூர், ஏற்காடு, மேட்டுப்பாளையம், தாராபுரம், ராசிபுரம் (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**வட மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் வட மாவட்டங்களில் சனிக்கிழமை பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நிலநடுக்கோட்டு இந்திய பெருங்கடல்- தெற்கு அந்தமான் கடல் ஒட்டிய பகுதியில் நிலை கொண்டுள்ளது.இதன் காரணமாக தமிழகம், புதுவையின் பல இடங்களில் சனிக்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.மேலும், சேலம், தருமபுரி, நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இடி, மின்னலுடன் பலத்த மழை**

திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக வெள்ளிக்கிழமை மாலை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

திருவள்ளூரில்...திருவள்ளூரில் நாளுக்கு நாள் கோடை வெப்பம் அதிகரித்து வருகிறது. இதனால் அனல் காற்று, புழுக்கம் தாங்க முடியாமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை முதல் வெயிலின் கடுமை அதிகமாக இருந்தது. இந்நிலையில் திடீரென மாலை 4.30 மணி முதல் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. 40 நிமிடங்கள் வரை நீடித்த இந்த மழையால் அப்பகுதியில் ஓரளவு வெப்பம் தணிந்து குளிந்த காற்று வீடியது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பூந்தமல்லியில்...பூந்தமல்லி, குன்றத்தூர், போரூர் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

இதேபோன்று உத்தரமேரூர் பகுதியிலும் வெள்ளிக்கிழமை மாலை 40 நிமிடங்கள் பலத்த மழை பெய்தது.

**ஏப்ரல் 29-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏப்ரல் 29-ஆம் தேதி, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை:

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஏப்ரல் 29-ஆம் தேதி, ஆட்சியர் கு கோவிந்தராஜ் தலைமையில் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம்.

**உதகையில் பரவலாக மழை**

உதகையில் கடந்த 2 வாரங்களாக பரவலாக மழை பெய்து வருவதால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

உதகையின் முக்கிய நீராதாரமான பார்சன்ஸ்வேலி நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் கடந்தாண்டைக் காட்டிலும் வெகுவாகக் குறைந்துவிட்டது. மின் உற்பத்திக்காக இந்த அணையிலிருந்து தண்ணீர் தொடர்ந்து திறக்கப்பட்டு வருவதால் நீர்மட்டம் குறைந்துள்ளது.

பார்சன்ஸ்வேலி நீர்த்தேக்கத்தில் மொத்தக் கொள்ளளவான 58 அடியில் தற்போது 20 அடிக்கு மட்டுமே தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டில் 35 அடியாக இருந்தது. நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ள போதிலும் தற்போதுள்ள தண்ணீரைக் கொண்டு அடுத்த ஓராண்டிற்கு சமாளிக்க முடியும் என உதகை நகர்மன்ற ஆணையர் சிவகுமார் தெரிவித்துள்ளார். தண்ணீர் குறைந்திருந்தாலும் உதகையைத் தவிர வெலிங்டன் ராணுவ மையம் மற்றும் உதகையைச் சுற்றியுள்ள சில கிராமங்களுக்கு பார்சன்ஸ்வேலியிலிருந்து வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தில் எத்தகைய மாற்றமும் இல்லை என்றார்.

அதேபோல, மார்லிமந்து நீர்த்தேக்கத்தில் மொத்தக் கொள்ளளவான 23 அடியில், தற்போது 9 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டில் 5 அடியாக இருந்தது. டைகர்ஹில் நீர்த்தேக்கத்தில் மொத்தக் கொள்ளளவான 39 அடியில், தற்போது 32 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டில் 16.5 அடிக்கு மட்டுமே தண்ணீர் இருந்தது. கோரிசோலை நீர்த்தேக்கத்தில் மொத்தக் கொள்ளளவான 35 அடியில், 5 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்தாண்டில் 2.5 அடியாக இருந்தது.

மேல் தொட்டபெட்டாவில் மொத்தக் கொள்ளளவான 31 அடியில், தற்போது 17 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்தாண்டில் 13 அடிக்கு மட்டுமே தண்ணீர் இருந்தது. மேல் கோடப்பமந்தில் மொத்தக் கொள்ளளவான 12 அடியில், தற்போது 6 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்தாண்டில் 2 அடிக்கு மட்டுமே தண்ணீர் இருந்தது. கீழ்

கோடப்பமந்தில் மொத்தக் கொள்ளளவான 13 அடியில், தற்போது 3 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டிலும் இதே அளவுக்கே தண்ணீர் இருந்தது.

"ஓல்டு ஊட்டி' நீர்த்தேக்கத்தில் மொத்தக் கொள்ளளவான 6 அடியில், 5 அடிக்கு தண்ணீர் உள்ளது. கடந்தாண்டில் 3 அடிக்கு தண்ணீர் இருந்தது. கிளன்ராக்கில் மொத்தக் கொள்ளளவான 7 அடியில், 3 அடிக்கு தண்ணீர் உள்ளது. இதில் கடந்தாண்டில் 1.5 அடிக்கு மட்டுமே தண்ணீர் இருந்தது.

மொத்தமுள்ள 10 நீர்த்தேக்கங்களில், கீழ் தொட்டபெட்டா நீர்த்தேக்கம் மட்டும் முழு கொள்ளளவான 14 அடி முழுமையாக நிரம்பியுள்ளது. இதில் கடந்தாண்டில் 9 அடிக்கு மட்டுமே தண்ணீர் இருந்தது. நடப்பாண்டில், பரவலாக பெய்துவரும் கோடை மழையால் உதகையிலுள்ள பெரும்பாலான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**காலையில் வெயில், மாலையில் மழை**

வேலூர் மாநகரில் வெள்ளிக்கிழமை காலை முதல் பிற்பகல் வரை வெயிலின் தாக்கம் அதிகம் இருந்தது. மாலையில் திடீரென மேகமூட்டங்கள் சூழ்ந்து சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்தது.இடியுடன் கூடிய பலத்த மழையால் நகரின் பல இடங்களில் மின்தடை ஏற்பட்டது.இந்த மழையில் நகரில் உள்ள கானாற்றுக் கால்வாய்களில் மழை வெள்ளம் புரண்டோடியது.

முக்கியச் சாலைகளிலும், தேசிய நெடுஞ்சாலையின் அணுகு சாலையிலும், தாழ்வான பகுதிகளிலும் தண்ணீர் தேங்கியதால், வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்தது.மேலும், இந்த மழையால் வெப்பம் குறைந்து குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. வெள்ளிக்கிழமை வெப்பநிலை 100.7-ஆக பதிவானது.ஆம்பூரில்.. ஆம்பூரில் வெள்ளிக்கிழமை மாலை இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது.ஆம்பூரில் காலையிலிருந்தே கடுமையான வெயில் காய்ந்தது. இதன் காரணமாக அனல் காற்று வீசியது.

மாலை சுமார் 3.30 மணிக்கு திடீரென வானம் இருண்டு மழை பெய்யத் தொடங்கியது.சுமார் ஒரு மணி நேரம் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.குடியாத்தத்தில்.. குடியாத்தம், பேர்ணாம்பட்டு நகரங்கள், அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் வெள்ளிக்கிழமை மாலை லேசான மழை பெய்தது.

**அணைப்பகுதியில் தொடர் மழை: திற்பரப்பு அருவியில் வெள்ளம்**

குமரி மாவட்டத்தில் அணைப் பகுதிகள் உள்ளிட்ட மலையோரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை பலத்த இடி மின்னலுடன் கனமழை பெய்தது. இதனால் திற்பரப்பு அருவியில் அதிக அளவில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

குமரி மாவட்டத்தில் கோடை மழையின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த மழையினால் கரையோரப் பகுதிகளில் கருகிக் கிடந்த பயிர்கள் உயிர் பெற்றுள்ளன. மேலும் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. எனினும் மழையின் போது வீசும் பலத்தக் காற்று காரணமாக வாழைகள் மற்றும் ரப்பர் மரங்கள் சாய்ந்து விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுவதும் தொடர்கிறது.

ஆறுகளில் அதிக வெள்ளம்: மழையின் காரணமாக ஆறுகளில் வெள்ளத்தின் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கோதையாறு, பரளியாறு, தாமிரவருணி மற்றும் பழையாறு ஆகியவற்றிலும் இவற்றின் கிளை ஆறுகளிலும் அதிக வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கிறது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு ஆகிய அணைகளில் நீர் மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

திற்பரப்பு அருவி: மழையின் காரணமாக திற்பரப்பு அருவியில் வெள்ளம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வெள்ளிக்கிழமை இங்கு அதிகமான அளவில் வெள்ளம் கொட்டியது. தற்போது கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ள நிலையில் திற்பரப்பு அருவிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

**நெல்லை மாவட்டத்தில் தொடரும் மழை: இதுவரை 155 மி.மீ. பதிவு!**

திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழாண்டு இதுவரையில் 155 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. கோடை மழையானது மாவட்டம் முழுவதும் பரவலாக தொடர்ந்து பெய்து வருகிறது. இதன் மூலம், அனைத்து அணைகளிலும் சேர்த்து மொத்தமாக 4871 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

மழையளவு: திருநெல்வேலி மாவட்டத்தில் வளமையான மழை அளவு 814.80 மி.மீ. ஆகும். 2014ஆம் ஆண்டு பெறப்பட்ட மழையளவு 1320 மி.மீ. ஆகும். இது இயல்பைவிட 62 சதவீதம் கூடுதலாகும். 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் இயல்பான மழையளவு 181.5 மி.மீ. ஆகும். ஆனால், ஜனவரியில் 4.05 மி.மீ மட்டும் பெறப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதம் மழையே இல்லை. மார்ச் மாதம் வழக்கத்தைவிட கூடுதலாக 49.63 மி.மீ. என்ற அளவில் மழை பெறப்பட்டது. ஏப்ரல் மாதம் இதுவரையில் 100.45 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது. நிகழாண்டு இதுவரையில் 154.13 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெறப்பட்டு வருவதால் மழையளவு மேலும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சூறைக்காற்றுடன் மழை: வெள்ளிக்கிழமையும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக நல்ல மழை பெய்தது. திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சியில் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. பத்தமடை அருகே பனைமரம் சரிந்து விழுந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதேபோல, பல்வேறு பகுதிகளில் மரங்கள் சாய்ந்து விழுந்தன. மின் கம்பத்தில் இருந்து மின் கம்பிகளும் அறுந்து விழுந்தன.

அணைகளில் நீர் இருப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முக்கிய அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, குண்டாறு, அடவிநயினார், வடக்குப் பச்சையாறு, கொடுமுடியாறு, நம்பியாறு ஆகிய அணைக்கட்டுகளில் கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 1989.54 மில்லியன் கன

அடி மட்டுமே நீர் இருப்பு இருந்தது. ஆனால், இப்போது பெய்து வரும் அதிகபட்ச மழையால் அணைகளிலும் நீர்இருப்பு அதிகரித்துள்ளது. 11 அணைகளிலும் சேர்த்து மொத்தமாக 4871 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. இது அணைகளில் மொத்த இருப்பில் 35.38 சதமாகும். ஆனால், கடந்தாண்டு இதே கால கட்டத்தில் 14.45 சதம் மட்டுமே நீர் இருப்பு இருந்தது.

குளங்களில் நீர் இருப்பு: மாவட்டத்தில் 921 கால்வரத்து குளங்களும் 1,528 மானாவாரி குளங்களும் சேர்த்து மொத்தம் 2,449 குளங்கள் உள்ளன. இதில், 6 குளங்களில் 3 மாதத்துக்கு நீர் இருப்பு உள்ளது. 88 குளங்களில் 2 மாதத்துக்கும், 1,218 குளங்களில் ஒரு மாதத்துக்கும் நீர் இருப்பு உள்ளது. 1,137 குளங்கள் வறண்டு காணப்படுகின்றன.

இதேபோல, மாவட்டத்தில் உள்ள கிணறுகளில் சராசரியாக 5 மணி முதல் 6 மணி நேரம் பாசனம் மேற்கொள்ளும் அளவுக்கு நீர் இருப்பு உள்ளது.

**முட்டம் கடற்கரை கிராமத்தில் ரூ. 103 கோடியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்**

குமரி மாவட்டம் முட்டம் கடற்கரை கிராமத்தில் ரூ. 103 கோடி செலவில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரைவில் தொடங்கும் என வெள்ளிக்கிழமை நடைபெற்ற மீனவர் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியர் தெரிவித்தார்.

நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மீனவர் குறைதீர் கூட்டத்துக்கு ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தலைமை வகித்தார். இதில் மீன்வளத் துறை உதவி இயக்குநர் ரூபர்ட் ஜோதி, துணை இயக்குநர் மோகன் மற்றும் மீனவப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் ஆரோக்கியபுரம் தொடங்கி நீரோடி வரையிலான கடற்கரைச் சாலையை சீரமைக்க வேண்டுமெனவும்,

மீனவ கிராமங்களில் ரேஷன் பொருள்கள் சரிவர கிடைக்கவில்லை எனவும், கடற்கரைச் சாலையில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகள்

நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்து ஆட்சியர் பேசியதாவது: கடற்கரைச் சாலைகளை சீரமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ரேஷன் கடைகளில் முறையாகப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். முட்டம்-திற்பரப்பு, முட்டம்-கன்னியாகுமரி இடையே மீண்டும் பேருந்து போக்குவரத்துத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் முட்டம் கடற்கரைக் கிராமத்தில் ரூ. 103 கோடி மதிப்பீட்டில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசின் அனுமதி கிடைத்ததும் இத்திட்டம் தொடங்கப்படும் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இடி விழுந்ததால் திடீர் நீரூற்று: ஒரே நாளில் நிரம்பியது கிணறு**

பழநி: பழநி அருகே, கிணற்றில் இடி விழுந்ததில், நீரூற்று பெருக்கெடுத்து, ஒரே நாளில் கிணறு நிரம்பியது. திண்டுக்கல் மாவட்டம், பழநி சுற்று வட்டாரப் பகுதி களில், கடந்த சில நாட்களாக, இடி, மின்னலுடன் மழை பெய்தது. நெய்க்காரப்பட்டியைச் சேர்ந்த, விவசாயி நவநீதன் தோட்டத்தில், 34 அடி ஆழ கிணறு உள்ளது. இதில், இடி விழுந்ததில், நீரூற்று பெருக்கெடுத்து, நேற்று ஒரே நாளில், கிணறு நிரம்பியது.**இது குறித்து, நவநீதன் கூறியதாவது:**
முப்பது ஆண்டுகளாக, கிணறு பயன்பாட்டில் உள்ளது. மார்ச், ஏப்ரலில், கிணற்றில் குறைவாகவே தண்ணீர் இருக்கும். கடந்த, மூன்று நாட்களாக, ஓரளவிற்கு மழை பெய்த நிலை யில், நேற்று கிணறு நிரம்பியது. தண்ணீரை வெளியேற்றியபோது, உள்ளே இருந்து தண்ணீர்

பெருக்கெடுத்தது. தொடர்ந்து, நான்கு மணி நேரம் மோட்டாரை இயக்கியும், தண்ணீர் குறையவில்லை. கிணற்றுக்குள் இடி விழுந்து, ஊற்று உருவாகி இருக்கலாம். நீர்வள ஆராய்ச்சி துறை அதிகாரிகள் ஆய்வு செய்தால் காரணம் தெரியும். இவ்வாறு, அவர் தெரிவித்தார். பொதுப்பணித்துறை பொறியாளர் ஒருவர் கூறுகையில், 'பலத்த இடிவிழுந்தால், பாறையில் ஓட்டை விழுந்து, இது போல தண்ணீர் பெருக்கெடுத்து வர வாய்ப்பு உள்ளது. இதற்கு முன், பழநி குளத்தில் இதுபோன்று ஏற்பட்டது' என்றார்.

**மழையின் அளவை கணக்கிட்டது நார்வே வானிலை மையம்**

சென்னை: தமிழகத்தில் பெய்யும் மழை மற்றும் அதன் அளவை துல்லியமாக கணக்கிட்டு ஆச்சரியப்படுத்தியுள்ளது நார்வே அரசின் வானிலை ஆய்வு மையம். இது குறித்து அவை விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னையில் இன்று அதிகாலை 5 மணி முதல் காலை 11 மணிக்குள் 0.8மில்லி மீட்டர் அளவிலும் அதன்பின்னர் மாலை 5 மணிக்குள் 3.2 மில்லி மீட்டர் அளவில் மழை பெய்யும் என அறிவித்துள்ளது. மாலை 5 மணிக்கு பின்னர் மழை இருக்காது எனவும் கூறியுள்ளது. முன்னதாக நேற்று சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மாலை 5மணியில் இருந்து இரவு 11 மணிக்குள் மழை பெய்யும் எனவும் அவை 5.2மில்லி மீட்டர் அளவிற்குள் எனவும் தெரிவித்திருந்தது. அதன் அறிக்கையை ஒத்துபோகும் வகையில் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மழை கொட்டி தீர்த்தது.

**இடி, மின்னலுடன் மழை: சென்னைவாசிகள் மகிழ்ச்சி**

சென்னை: சென்னை மற்றும் சுற்றுப் பகுதியில், நேற்று மாலை முதல், இடி, மின்னலுடன் மழை பெய்தது. இரவு வரை நீடித்த மழையால், கடும் வெப்பத்தில் தவித்து வந்த, சென்னைவாசிகள் சற்று ஆறுதல் அடைந்தனர்.

**மின் வினியோகம் நிறுத்தம்:** லட்சத் தீவு பகுதியில் ஏற்பட்ட வெப்ப சலனத்தால், தமிழகத்தின் உள் மாவட்டங்களில், இரு நாட்களாக மழை பெய்து வருகிறது. திண்டுக்கல், ஈரோடு, தர்மபுரி, கோவை, நாமக்கல், கிருஷ்ணகிரி, மதுரை, கோவை உள்ளிட்ட பகுதிகளில், மழை பெய்தது. 'வெப்ப சலனம் தொடருவதால், அடுத்த, 24 மணி நேரத்துக்கு மழை பெய்யும்' என, சென்னை வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில், நேற்று மாலை, 5:00 மணி முதல், தாம்பரம் மற்றும் சென்னை சுற்றுப் பகுதிகளில், இடி, மின்னலுடன் மழை பெய்யத் துவங்கியது. 30 நிமிடங்களுக்கு மேல், அப்பகுதிகளில் மழை நீடித்தது. இடி, மின்னல் கடுமையாக இருந்ததால், மின் வினியோகம் நிறுத்தப்பட்டது.

**போக்குவரத்து நெரிசல்:** இரவு, 7:45 மணிக்கு மேல், சென்னை மாநகரப் பகுதிகளான, கிண்டி, சைதாபேட்டை, ராயப்பேட்டை, மெரீனா, தேனாம்பேட்டை, அபிராமபுரம், பாரிமுனை, ராயபுரம், திருவொற்றியூர், அண்ணாநகர், மாதவரம், புழல், செங்குன்றம், அம்பத்தூர், ஆவடி பகுதிகளில், இடி, மின்னலுடன் மழை பெய்தது. சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. கீழ்மட்ட பாலங்கள் உள்ள பகுதிகளில், மழை நீர் புகுந்தது. இதனால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

**கோடைமழை: சுற்றுலா பயணிகள் குஷி**

வால்பாறை :வால்பாறையை குளிர்வித்த கோடைமழையினால், சுற்றுலாப்பணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கோவை மாவட்டம் வால்பாறை சுற்றுலாப்பயணிகளின் சொர்க்க பூமியாக உள்ளது. இயற்கை வளம் நிறைந்த வால்பாறைக்கு கோடை விடு

முறையில் சுற்றுலாப்பயணிகள் படையெடுக்க துவங்கி விட்டனர்.

தமிழகம் முழுவதும் கோடைவெயில் கொளுத்தும் நிலையில், வால்பாறை மலைப்பகுதியில் மட்டும் தொடர்ந்து கோடைமழை சாரல் மழையாக பெய்துவருவதால், குளிர்ச்சி நிலவுகிறது. இதனால், அங்கு வந்துள்ள சுற்றுலாப்பயணிகள் குஷியடைந்துள்ளனர்.

சோலையாறு நீர்மட்டம் சரிவு

வால்பாறையில் கோடைமழை சாரல்மழையாக பெய்துவரும் நிலையில், 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை, 5:73 அடியாக சரிந்தது.

அணைக்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 172 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதே போல் 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை, 16:52 அடியாக சரிந்தது.அணைக்கு வினாடிக்கு 251 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 385 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் 2 மி.மீ., பரம்பிக்குளத்தில் 3 மி.மீ.,மழை பெய்துள்ளது.

**பாலைவனத்தில் விவசாயம் : இந்தியர்கள் சாதனை**

தோஹா: கத்தார் நாட்டின் தலைநகர் தோஹா அருகே உள்ள பாலை வன நிலத்தில் இந்தியர்கள் விவசாயம் செய்து சாதனை படைத்துள்ளனர். இது குறித்து கூறப்படுவதாவது: கத்தார் நாட்டின் தலைநகர் தோஹா அருகே உள்ள அல்தோசான் பூங்காவில் கேரள பெண்கள் குழுவினர் நம்முடே அடுக்கள தோட்டம் என்ற பெயரில் காய்கறி தோட்டம் உருவாக்கினர். இது குறித்து செய்தியை பேஸ்புக்கிலும் வெளியிட்டனர். இதனை தொடர்ந்து இவர்களுடன் இயற்கை ஆர்வலர்களும் இணைந்தனர். இவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இதே பகுதியில் நெல்லை விளைவிக்கும் முயற்சித்தனர். முயற்சியின் பயனாக நெல் அறுவடைகசு தயாராக உள்ளது. வரும் 1-ம் தேதி அறுவடை செய்ய உள்ளனர். இந்நிகழ்ச்சிக்கு கேரள அமைச்சரை சிறப்பு அழைப்பாளராக அழைக்க உள்ளனர். கடின உழைப்பு , கூட்டு முயற்சியின் பலனாகவும், அல்தோசன் பூங்கா நிர்வாகத்தினர் அளித்த ஊக்கமும் காரணம் என குழுவினர் தெரிவித்துள்ளனர்.

**மூலிகை ஆராய்ச்சி மையம்: பார்லி.,யில் எம்.பி., பேச்சு**

ராசிபுரம்,:""கொல்லிலையில் மூலிகை ஆராய்ச்சி மையம் மற்றும் யோகா மையம் அமைக்க வேண்டும்'' என, எம்.பி., சுந்தரம், லோக்சபாவில் பேசியதாக, அவர் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில், இயற்கை மூலிகைகள் அதிகளவில் காணப்படுகிறது. இயற்கையை விரும்புவர்களுக்கும், யோக பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கும், மிகச்சிறந்த இடமாக அமைந்துள்ளது.கொல்லிமலை பகுதியில், இயற்கை மருத்துவம், யோகா மையம் துவங்கப்பட்டால், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா முறைகளை மேம்படுத்துவதற்கும், ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் பயிற்சிகளை மேற்கொள்ளவும் ஏதுவாக அமையும்.வரும், ஜூன், 21ம் தேதி, சர்வதேச யோக தினம் கொண்டாடப்படுகிறது. எனவே, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பகுதியில், இயற்கை மருத்துவம் மற்றும் யோகாவுக்கான, மத்திய ஆராய்ச்சி மையம் அமைக்க சுகாதாரத்துறையின் கீழ், "ஆயூஸ்' அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**சூறாவளி காற்றுடன் கனமழைகுளிர்ந்த காற்றால் மகிழ்ச்சி**

குமாரபாளையம்,:குமாரபாளையத்தில், நேற்று முன்தினம் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்ததால், மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. இரவில் குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.குமாரபாளையம் பகுதியில், நேற்று முன்தினம் பகலில் வெயில் கத்தரி வெயில் போல் தாக்கியது. மக்கள் கடும் அவதிப்பட்டனர். வெயிலுக்கு பயந்து பலரும் வெளியே வராமல் வீட்டுக்குள் முடங்கினர். அதன் காரணமாக, இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்தது.இந்நிலையில், அன்றிரவு, 7.30 மணிக்கு, சூறாவளி காற்று வீசியது. அதில், புழுதிகள் பறந்ததால், சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள், பாதசாரிகள் என பலரும் கடும் அவதிப்பட்டனர். அதை தொடர்ந்து, கனமழை பெய்தது. அதனால், பள்ளிபாளையம் சாலை, சேலம் மெயின் சாலை, இடைப்பாடி மற்றும் ஆனங்கூர் சாலைகளில்

மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி நின்றது. மேடு எது, பள்ளம் எது என தெரியாததால், வாகன ஓட்டிகள் தட்டுத்தடுமாறி செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்த கோடை மழை, 2 மணி நேரம் நீடித்தது. திடீர் மழை காரணமாக குளிர்ந்த காற்று வீசியது. அதனால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.மேலும், கோம்பு பள்ளத்தில் நகரின் பல்வேறு பகுதிகளில் வழியாக வழிந்தோடிய மழைநீர், அதிக அளவில் சென்றதால், காற்றாற்று வெள்ளம்போல் வெளியேறிது.

**பாசன நிலங்களில் மழையால் தீவனம் உற்பத்தி :கோபியில் ஆடு வளர்ப்போர் உற்சாகம்**

கோபி,: தடப்பள்ளி பாசனத்துக்கு உட்பட்ட பகுதியில், கடந்த ஓரிரு வாரங்களாக பெய்த மழையால், மேய்ச்சல் நிலங்களில் பச்சை புற்கள் முளைத்ததால், ஆடு வளர்ப்பு விவசாயிகள், மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ஈரோடு மாவட்ட பாசனத்துக்கு முக்கிய நீர் ஆதாரமாக உள்ள பவானிசாகர் அணையில் இருந்து, பவானி ஆற்றுக்கு திறக்கப்படும் தண்ணீர், கொடிவேரி அணை மூலம், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனமாக, மொத்தம், 24,204 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன.ஆண்டுக்கு இரு போகங்கள் திறக்கப்படும் தண்ணீரால், நெல், வாழை, கரும்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள், விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசு கடந்த, 2014 நவ., 13ல், இரண்டாம் போக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.இந்த தண்ணீரை நம்பி, ஏ.எஸ்.டி., 16 (இட்லி குண்டு), கோ., 39, கோ.,45, பி.பி.டி., பொன்னி உள்ளிட்ட நெல் ரகங்களை, விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்திருந்தனர்.கள்ளிப்பட்டி, டி.என்.பாளையம், பங்களாப்புதூர், பாரியூர் கரை, கள்ளப்பட்டி உள்ளிட்ட இடங்களில், இரண்டாம் போக அறுவடை பணி முடிந்துள்ளது. முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க, தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள், தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.கடந்த ஓரீரு வாரங்களாக, கோபி

மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பொழித்து வருகிறது.
இதனால் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பகுதியில், தரிசாக இருந்த நிலங்களில், பச்சை தீவனங்கள் ஆங்காங்கே முளைத்துள்ளது.மழை பெய்ததால், ஆடு வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் கோபி பகுதி விவசாயிகளுக்கு, பச்சை தீவன பிரச்னை தீர்ந்துள்ளது. கோபியில் இருந்து கள்ளிப்பட்டி வழியாக அத்தாணி செல்லும் வழியில், தடப்பள்ளி பாசனத்துக்கு உட்பட்ட பகுதியில் ஏராளமான விளை நிலங்கள் உள்ளன.இங்கு பெய்த மழையால், பச்சை தீவனங்கள் அதிகளவில் வளர்ந்துள்ளன. இப்பகுதி விவசாயிகள் தங்கள் நிலத்தில், 100க்கும் மேற்பட்ட ஆடுகளை மேயவிட்டு, வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.இதுபற்றி விவசாயிகள் கூறியதாவது:தடப்பள்ளி பாசனத்துக்கு உட்பட்ட பகுதியில், கடந்த ஓரிரு வாரங்களாக மழை பெய்து வருகிறது. ஆடு வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு, பச்சை தீவனம் பற்றாக்குறையாக இருந்தது. சில சமயங்களில் ஆடுகளுக்கு, பச்சை தீவனம் விலை கொடுத்து வாங்கினோம். தற்போது பெய்த மழையால், அறுவடை பணி முடிந்த விளை நிலங்களில், பச்சை தீவனம் முளைத்துள்ளது. தொடர்ந்து மழை பெய்தால், தீவன பிரச்னை இருக்காது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**சூரியகாந்தி அறுவடை தீவிரம்ஒரு கிலோ ரூ.35 க்கு விற்பனை**

கரூர்: கரூர் சுற்று வட்டாரத்தில் சூரியகாந்தி அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது. ஒரு கிலோ சூரியகாந்தி பூ, 35 ரூபாய்க்கு விற்கப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கரூர் சுற்று வட்டாரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் சூரியகாந்தியை விவசாயிகள் பயிரிடப்பட்டுள்ளது. 100 நாள் பயிரான சூரியகாந்தி, அறுவடைப்பணி தீவிரமாக நடக்கிறது. சூரியகாந்தியின் தேவையின் அதிகரிப்பு காரணமாக, ஒரு கிலோ பூ, 35 ரூபாய்க்கு விற்பனையாவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கீழபசுபதிபாளையம் பகுதியை சேர்ந்த விவசாயி செந்தில்குமார், கூறியதாவது:ஒரு ஏக்கரில் சூரியகாந்தி பயிரிட இரண்டு கிலோ விதை பயன்படுத்த வேளாண்மை துறை

பரிந்துரை செய்துள்ளது. ஆனால், ஒரு ஏக்கருக்கு இரண்டே கால் கிலோ விதை நடவு செய்தேன். 100 நாட்களில் சூரியகாந்தி அறுவடைக்கு வந்து விடும். கடந்த காலங்களில் ஒரு கிலோ, 27 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போது தரமான விதையாக இருந்ததால் கிலோ, 35 ரூபாய்க்கு விற்பனையாகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு மே 4 முதல் பயிர் காப்பீட்டு நிவாரணம்**

ராமநாதபுரம்,: மே 4 ல் பயிர் காப்பீட்டு நிவாரணம் வழங்கப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார்.ராமநாதபுரம் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் நந்தக்குமார் தலைமையிலும், டி.ஆர்.ஓ.,(பொறுப்பு) சமீரன், இணை இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) கனகராஜன் முன்னிலையிலும் நடந்தது.கூட்டம் துவங்கியதும் விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீட்டு நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். மத்திய, மாநில அரசுகள் தங்களது பங்களிப்பு தொகையை வழங்கிவிட்டதால், மே 4 முதல் பயிர் காப்பீட்டு நிவாரணம் பட்டுவாடா துவங்கும், என கலெக்டர் தெரிவித்தார். அதன்பிறகு நடந்த கூட்டத்தில் ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் கால்நடைகள் நோய் தாக்குதலில் பலியாகின்றன. அரசு மானியத்தில் வேளாண் உபகரணங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும், என கலெக்டர் உறுதியளித்தார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.13 கோடி செலவில் 6 இடங்களில் மீன் அங்காடிகள்

சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.13 கோடி செலவில் 6 இடங்களில் மீன் அங்காடிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் மொத்தம் 216 கடைகள் அமைக்கப்பட உள்ளன.

சென்னையை சுற்றியுள்ள பகுதிகள்

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மீன்பிரியர்கள் மீன்களை வாங்கி வீட்டில் சமைத்து சாப்பிடுவதற்கு ஏதுவாக குறிப்பிட்ட சில இடங்களில் மொத்த மீன் கடைகளையும், புறநகர் பகுதிகளில் மீன்களை சுமந்து சென்றும் மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

சென்னையில் காசிமேடு கடற்கரை, சிந்தாதிரிப்பேட்டை, பட்டாளம், பெரம்பூர், மயிலாப்பூர், மயிலாப்பூர் ஐஸ்அவுஸ், சைதாப்பேட்டை, நீலாங்கரை, கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஜாம்பஜார், வானகரம், செங்குன்றம் ஆகிய இடங்களில் மொத்த மீன் கடைகள் உள்ளது.

தற்போது சென்னை மாநகராட்சி சார்பில் மேலும் 6 இடங்களில் ரூ.13 கோடி செலவில் மீன் அங்காடிகள் அமைக்கப்பட உள்ளன. அதன் விவரம் வருமாறு:-மீன் அங்காடிகள்மாநகராட்சி சார்பில் மீன் அங்காடிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னையை சுற்றியுள்ள பகுதிகளான, மண்டலம் 4, வார்டு 48 பார்த்தசாரதி நகரில் ரூ.99.8 லட்சம் செலவில் 30 கடைகள் அமைக்கப்பட உள்ளன.இதேபோல், மண்டலம்-1, வார்டு 2 கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் ரூ.1 கோடியே 81 லட்சம் மதிப்பில் 37 கடைகளும், மண்டலம்-1 வார்டு 9 பட்டினத்தார் கோவில் தெருவில் ரூ.4 கோடியே 54 லட்சம் மதிப்பில் 51 கடைகளும் அமைக்கப்பட உள்ளன.

அதேபோல், மண்டலம்-6, வார்டு 74 நம்மாழ்வார்ப்பேட்டையில் ரூ.2 கோடியே 68 லட்சம் மதிப்பில் 12 கடைகளும், பல்நோக்கு அரங்குகளும் கட்டப்பட உள்ளன. ரூ.13 கோடியே 8 லட்சம்
மண்டலம்-9, வார்டு 120 நடுக்குப்பத்தில் ரூ.1 கோடியே 66 லட்சம் செலவில் 60 கடைகளும், மண்டலம் 7, வார்டு 87 பாடி எம்.டி.எச்.சாலையில் ரூ.1 கோடியே 32 லட்சம் மதிப்பில் 26 கடைகளும் அமைக்கப்பட உள்ளன.ஆக மொத்தம் சென்னை மாநகராட்சி ஏற்பாட்டில் ரூ.13 கோடியே 8 லட்சம் மதிப்பில் 6 இடங்களில் 216 மீன் கடைகள் அமைக்கப்பட உள்ளதாகவும், விரைவில் இதற்கான பணிகள் நடைபெறும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விளை நிலங்களை உழுதால் தான் மழை நீரை சேமித்து வைக்க முடியும் விவசாயிகளுக்கு வேளாண் துறை அதிகாரிகள் அறிவுரை**



விளை நிலங்களை உழுதால் தான் மழை நீரை சேமித்து வைக்க முடியும் என்று விவசாயி களுக்கு வேளாண் துறை அதிகாரிகள் அறிவுரை கூறியுள்ளனர்.மழை கிணத்துக்கடவு, நெகமம் பகுதிகளில் கடந்த சில நாட் களாக கடும் வெயில் அடித்து வந்தது. இதனால் மழை எப் போது பெய்யும் என்று விவ சாயிகள், பொது மக்கள் எதிர் பார்த்து காத்திருந்தனர். மேலும் கடும் வறட்சி நிலவி வந்ததால் மானாவாரி பயி ரான தக்காளி, பருத்தி, பொறி யல் தட்டை பயிறு, பச்சைமிள காய் உள்பட பல்வேறு காய்கறி பயிர்கள் கருகும் சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கிணத்துக்கடவு, நெகமம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் அவ்வப் போது மழை பெய்து வருகிறது. ஒரு சில நேரங்களில் பலத்த மழையும் பெய்துள்ளது. இந்த மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அறிவுரைமழை பெய்ததால் விவசாயி களுக்கு வேளாண் துறை அதிகாரிகள் சில அறிவுரை களை வழங்கினார்கள். அதன் விவரம் வருமாறு:-தற்போது பெய்து வரும் கோடை மழையை விவசாயி கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விவசாயிகள் தங் கள் விளை நிலங்களை உழு தால் மழைநீரை சேமித்து வைக்க முடியும். இந்த நீர் விவ சாயத்தின் போது பயன்படுத்த உதவியாக இருக்கும்.விவசாயிகள் தற்போது உழவு செய்வதால் நிலத்தில் உள்ள பூச்சிகளின் கூண்டு, புழுக்கள், தாவர வேர்கள்அழிக் கப்பட்டு விடும். நிலத்தில் முளைத்துள்ள வேண்டாத களைச்செடிகள் முற்றிலும் அழிந்து விடும். உழுவதால் கிடைக்கிற மழைநீர் வெளியில் ஓடாமல் பூமிக்குள் சென்று அடுத்த பருவத்துக்கு முழு வதும் பயன்படும். இவ்வாறு அறிவுரை வழங்கி உள்ளனர்.உழவு பணியில் விவசாயிகள்இதைத்தொடர்ந்து தற்போது கிணத்துக்கடவு, நெகமம் பகுதியில் உள்ள விவசாயிகள் நிலத்தை உழவும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். பெரும்பாலான விவசாயிகள் நிலத்தை டிராக்டர் மூலம் உழுது வரு கிறார்கள். தொடர்ந்து ஒரு சில விவசாயிகள் சித்திரைப் பட்டத்தில் சாகுபடியையும் தொடங்கி உள்ளனர். இதனால் தொடர்ந்து மழை பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

**கோவை வர்த்தக மையத்தில் ரூ.2½ கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம்**



கோவை வர்த்தக மையத்தில் ரூ.2½ கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது.கோவை வர்த்தக மையம்

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத் தூள் ஏலம் நடத்தப்படுகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத் தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி நடைபெற்ற 17-வது ஏலத்தின் விவரம் வருமாறு:-தேயிலைத்தூள் ஏலம் 3 லட்சத்து 33 ஆயிரத்து 322 கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. அதில் 2 லட்சத்து 898 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 60 சதவீதம் ஆகும். ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 424 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 79 ரூபாய் 67 காசு ஆகும். இது கடந்த வாரம் 78 ரூபாய் 83 காசாக இருந்தது. தேயிலைத்தூள் ரகத்தின் ஏல மதிப்பு ரூ.1 கோடியே 60 லட்சத்து 5 ஆயிரத்து 543 ஆகும்.இலைரக தேயிலைஇலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 47 ஆயிரத்து 373 கிலோ ஏலத்திற்கு வந்தது. அதில் 98 ஆயிரத்து 415 கிலோ ஏலம் போனது. இது 67 சதவீதம் ஆகும். 48 ஆயிரத்து 958 கிலோ தேக்கம் அடைந்து உள்ளது.

ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 76 ரூபாய் 76 காசு ஆகும். இது கடந்த வாரம் 75 ரூபாய் 21 காசாக இருந்தது. இதன் மொத்த விற்பனை மதிப்பு ரூ.75 லட்சத்து 54 ஆயிரத்து 335 ஆகும்.

ரூ.2½ கோடிக்கு விற்பனைஇந்த ஏலத்தில் 2 லட்சத்து 99 ஆயிரத்து 313 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலை ரக தேயிலை விற்பனை ஆகி உள்ளது. 1 லட்சத்து 81 ஆயிரத்து 382 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 35 லட்சத்து 59 ஆயிரத்து 878 ஆகும்.இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.

**கோடைமழை எதிரொலி: நிலக்கோட்டை பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீங்கியது**



கோடைமழை எதிரொலியாக நிலக்கோட்டை பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீங்கியது. இந்த நிலையில் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோடை மழைநிலக்கோட்டை அருகே அணைப்பட்டியில் வைகை ஆற்றின் குறுக்கே பேரணை கட்டப்பட்டுள்ளது. வைகை அணை திறக்கப்படும் போது தண்ணீர் இங்கு தேக¢கி வைககப்படுவது கிடையாது. ஏற்கனவே வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடாததால் இந்த பகுதி விவசாய நிலங்கள் வறட்சியின் பிடியில் சிககி கிடந்தன. எனவே விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களுககு ஆளாகி உள்ள நிலையில் மேலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்ற கவலையில் இருந்தனர்.இந்த நிலையில் கோடை மழை கொட்டியது. இதனால் அணைப்பட்டி வைகை ஆற்றுப்படுகையில் தண்ணீர் செல்கிறது. இது பொதுமக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்கும் ஊராட்சிகளான நிலக்கோட்டை, கொடைரோடு, சின்னாளப்பட்டி, மைக்கேல்பாளையம், பிள்ளையார்நத்தம், எத்திலோடு, விளாம்பட்டி, ராமராஜபுரம், சித்தர்கள்நத்தம் போன்ற ஊராட்சிகளில் ஆழ்குழாய் கிணறுகளில் அதிகளவு ஊற்று நீர் பொங்குகிறது. எனவே இந்த பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு முற்றிலும் நீங்கி உள்ளது.

தண்ணீர் திறக்க கோரிக்கை:

இந்தநிலையில் தமிழகத்தில் நடைபெறும் சித்திரை மாத பெரிய திருவிழாவான மதுரை கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி வருகிற மே மாதம் 1-ந்தேதி நடக்கிறது. அதற்கு தற்போது வைகை ஆற்றுப்படுகையில் செல்லும் மழைநீர் மட்டும் போதாது என்றும், மேலும் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தோவாளை மார்க்கெட்டில் பூக்களின் விலை கடும் உயர்வு பிச்சி கிலோ ரூ.900-க்கு விற்பனை**



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பூக்களின் விலை கடுமையாக உயர்ந்தது. பிச்சி ஒரு கிலோ ரூ.900-க்கு விற்பனை செய்யப்பட்டது.

தோவாளை பூ மார்க்கெட்நாகர்கோவில் அருகே தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இந்த மார்க்கெட்டுக்கு மதுரை, விருதுநகர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினந்தோறும் லாரிகளில் பூக்கள் வந்து இறங்கும். இங்கு டன் கணக்கில் பூக்கள் விற்பனை நடைபெறும்.

இந்த மார்க்கெட்டுக்கு குமரி மாவட்ட பூ வியாபாரிகள் மட்டுமல்லாமல், கேரள பூ வியாபாரிகளும் வந்து பூக்களை வாங்கி செல்வது வழக்கம்.

பிச்சி கிலோ ரூ.900 தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று முன்தினம் பிச்சி ஒரு கிலோ ரூ.350-க்கு விற்பனை செய்யப்பட்டது. பூக்களின் விலை நேற்று கடுமையாக உயர்ந்தது. அதாவது ஒரு கிலோ பிச்சி 2½ மடங்கு உயர்ந்து ரூ.900-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதே போல் ரூ.300-க்கு

விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ முல்லை ரூ.600-க்கும், ரூ.200-க்கு விற்பனை செய்யப்பட்ட 100 தாமரைப்பூக்கள் ரூ.400-க்கும் விற்பனை செய்யப்பட்டது. மற்ற பூக்களின் விலை ஒரு கிலோவுக்கு வருமாறு:-

கனகாம்பரம் ரூ.200, வெள்ளை சிவந்தி ரூ.200, சிவந்தி ரூ.150, அரளிப்பூ ரூ.150, மல்லிகை ரூ.150, பட்டன்ரோஸ் ரூ.100, சம்பங்கி ரூ.80, மஞ்சள்கேந்தி ரூ.70, கேந்தி ரூ.60, மாம்பழக்கேந்தி ரூ.50, வாடாமல்லி ரூ.50, துளசி ரூ.40, கொழுந்து ரூ.40, கோழிப்பூ ரூ.40, பச்சை ரூ.5, மரிக்கொழுந்து ஒரு கட்டு ரூ.60, ஸ்டெம்புரோஸ் ஒரு கட்டு ரூ.120, 100 ரோஜாப்பூ ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்டது. பூக்களின் விலை உயர்வு குறித்து தோவாளை வியாபாரியிடம் கேட்ட போது, மலையாள மேட மாதம் 10-வது நாளான இன்று (நேற்று) பொங்கல் வைத்து வழிபாடு நடத்துவார்கள். இதற்காக ஏராளமானவர்கள் மார்க்கெட்டுக்கு வந்து பூக்களை வாங்கி சென்றனர். இதனால் பூக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை கடுமையாக உயர்ந்தது என்றார்.

**ஊட்டியில் தொடர் மழை: சுற்றுலா பயணிகள், பொதுமக்களுக்கு வழங்க தேவையான குடிநீர் உள்ளது நகராட்சி கமிஷனர் பேட்டி**



ஊட்டியில் பெய்த தொடர் மழை காரண மாக சுற்றுலா வரும் பயணிகள் மற்றும் உள் ளூர் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தேவை யான குடிநீர் உள்ளதாக நகராட்சி கமிஷனர் சிவக்குமார் தெரிவித்து உள்ளார்.

பார்சன்ஸ் வேலி அணை ஊட்டி நகராட்சி கமிஷனர் சிவக்குமார் நிருபர்களிடம் கூறியதாவது:- கோடை காலம் தொடங்கி உள்ளதால் வறட்சி கால நிவாரண நிதியாகஊட்டி நகராட்சிக்கு ரூ.10 லட்சம் தமிழக

அரசு வழங்கி உள்ளது. இந்த நிதியில் இருந்து ஓல்டு ஊட்டி உள்ளிட்ட 3 இடங்க ளில் உள்ள கிணறுகள் தூர் வார நடவடிக்கை எடுக்கப் பட்டு உள்ளது.மேலும் குழாய் மூலம் தண்ணீர் வழங்க முடியாத இடங் களில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட பிளாஸ் டிக் குடிநீர் தொட்டிகள் வைக் கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு உள்ளது. இந்த இடங்க ளுக்கு நகராட்சியில் உள்ள 3 குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படும். தேவைப்பட் டால் 3 தனியார் குடிநீர் லாரி கள் வாடகைக்கு அமர்த்தப் படும்.சாலைகள் சீரமைப்பு ஊட்டி நகராட்சிக்குட்பட்ட சாலைகளை பழுதுபார்க்கும் பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகிறது. அடுத்த மாதத்திற்குள் சாலை சீர மைப்பு பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. ஊட்டி மத்திய பஸ் நிலையம் அருகில் மீன் வளத் துறைக்கு சொந்தமான இடத் தில் வாகன நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு உள்ளது.இதற்கான நிலம் மீன் வளத் துறையிடம் இருந்து நகராட்சி யிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இங்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க ரூ.10 கோடியில் வரைவு திட்டம் அனுப்பப்பட்டு உள்ளது. இந்த நிதி வந்ததும் பணிகள் தொடங்கப்படும். தற்போது நகராட்சி பகுதியில் எல்.இ.டி. விளக்குகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.தண்ணீர் இருப்புஊட்டியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இந்த மழை காரண மாக ஊட்டி நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் பார்சன்ஸ் வேலி அணை, டைகர்ல் அணை, மார்லி மந்து அணை, கோடப்பமந்து அணை, தொட்டபெட்டா அணை ஆகியவற்றில் தண்ணீர் நிரம்பி வருகிறது. இதில் பார்சன்ஸ் வேலி அணையில் 20 அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது. இந்த தண்ணீர் அடுத்த 8 மாதங்கள் வரை போது மானதாக இருக்கும். இதேபோல் டைகர்ல் அணையில் 32 அடி உயரத் திற்கு தண்ணீர் உள்ளது. எனவே கோடை சீசன் காலத் தில் சுற்றுலா பயணிகள் மற் றும் உள்ளூர் பொதுமக்கள் ஆகியோருக்கு வழங்குவதற்கு தேவையான தண்ணீர் இருப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.மின் உற்பத்திநீலகிரி மாவட்டத்தில் பல் வேறு அணைகள் மற்றும் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. இதன் மூலம் சுமார் 750 மெகாவாட்

மின்சாரம் தினமும் உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. தற்போது பெய்து வரும் மழை காரண மாக எமரால்டு, அவலாஞ்சி, அப்பர் பவானி, பைக்காரா, முக்குருத்தி உள்ளிட்ட அணை களில் தண்ணீர் மட்டம் உயர்ந்து வருகிறது.
மேலும் அணைகளில் தேவையான தண்ணீர் இருப்பு உள்ளதால் கோடை காலத்தில் நீர்மின்உற்பத்தி பாதிக்கப் படாது என்று மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். மேலும் தொடர் மழையால் வனப்பகுதிகள் பசுமையாக காட்சியளிக்கிறது. இதனை இங்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல் கின்றனர்.

தினகரன்

**மழையால் உற்பத்தி பாதிப்பு உப்பு டன் ரூ.2,000 ஆனது**

தூத்துக்குடி: தமிழகத்தில் தூத்துக்குடி, வேதாரண்யம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் தூத்துக்குடி முதலிடம் வகிக்கிறது. சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் உள்ளன. பாத்தி அமைத்து தண்ணீர் பாய்ச்சி 15 நாட்களுக்கு பின்னரே உப்பு உற்பத்தியாகும். கோடையில் உப்பு உற்பத்தி அதிகமாக இருக்கும். இதனால் ஒரு டன் உப்பு ரூ.700 முதல் ரூ.800 வரை விற்கப்படும்.இந்த ஆண்டு ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்தே விட்டு விட்டு மழை பெய்வதால் உப்பு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் உப்பு விலை இரண்டு மடங்கு உயர்ந்து டன்னுக்கு ரூ.2 ஆயிரம் வரை விற்பனையாகிறது. மழை தொடர்ந்தால் உப்பு விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.

**கோடை மழையை பயன்படுத்தி பயிறு வகை விதைப்பண்ணை அமைக்கலாம் வேளாண் அதிகாரி அறிவுறுத்தல்**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் கோடை மழையை பயன்படுத்தி பயறுவகை பயிர்களில் விதை ப்பண்ணை அமைக்கலாம் என மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் இளங்கோவன் அறிவுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை: 'சிவகங்கை மா வட்டத்தில் தற்போது கோடைமழை பரவலாக பெய்து வருகிறது. இதனால் மண்ணில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி குறைந்த நீர் தேவை கொண்ட குறுகிய காலப்பயிரான பயறு வகை பயிர்களில் விதைப்பண்ணை அமைக்கலாம். உளுந்து பயிரில் வம்பன்4, வம்பன்5, வம்பன்6, கேஎம்2, வம்பன்2 பாசிப்பயறு ரகம் ஆகியவற்றில் விதைப்பண்ணை அமைக்கலாம். விதைப்பண்ணை அமைக்க தேவையான வல்லுநர் மற்றும் ஆதாரநிலை விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் பெறலாம். விதைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு தேவையான 8கிலோ விதைக்கு 32கிராம் டரைகோடெர்மா விரிடி என்ற உயிரின பூசனக்கொல்லி மருந்தை கலந்து விதைக்க வேண்டும். இவ்வாறு விதைப்பதால் விதை மூலம் பரவும் நோய்களை தடுக்கலாம். விதைத்த 35 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட விதை உற்பத்தியாளர் விதைப்பண்ணைகளை பதிவு செய்ய வேண்டும். விதைப்பண்ணை அமைப்பதால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. மேலும் அரசு பிரிமியம் மற்றும் விதை உற்பத்தி மானியம் வழங்கப்படுவதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது. பயறு வகை பயிர்களில் விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை 5 காசு உயர்வு 280 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல், : நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. இதில், முட்டை விலையில் 5 காசு உயர்த்தப்பட்டு, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 280 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்துள்ளதால் நாமக்கல்லிலும் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.48, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.79 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) வருமாறு:பெங்களூரு 300, மைசூர் 298, ஐதராபாத் 255, மும்பை 295, விஜயவாடா 251, கொல்கத்தா 300, பர்வாலா 251, டெல்லி 263 காசுகள்.

## ரூ.55 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

நாமக்கல், : நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெறுவது வழக்கம். அதன்படி, நேற்று காலை நடந்த ஏலத்திற்கு நேற்று முன்தினம் மாலை முதலே விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து அடுக்கி வைத்திருந்தனர். ஆக மொத்தம் 3500 மூட்டை பருத்தியை கொண்டு வந்திருந்தனர்.இதையடுத்து, நடைபெற்ற ஏலத்தில் பல மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்றனர். விவசாயிகள் முன்னிலையில் கூட்டுறவு அதிகாரிகள் ஏலம் நடத்தினர். இதில் டிசிஎச் ரகம் குவிண்டால் ரூ.4470 முதல் ரூ4900 வரையிலும், ஆர்சிஎச் ரகம் ரூ.3926 முதல் ரூ.4351 வரையிலும் ஏலம் போனது. இதன் மூலம் நேற்று ஒரேநாளில் ரூ.55 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

**கறிக்கோழி விலை தொடர்ந்து சரிவு**

கோவை, : கறிக்கோழி விலை கடந்த 2 நாட்களாக தொடர்ந்து சரிந்து வருகிறது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தினசரி கறிக்கோழி விலையை நிர்ணயித்து வருகின்றனர். கடந்த 14ம் தேதி பண்ணை விலை உயிருடன் கிலோ ரூ.84 ஆகவும், சில்லரை விற்பனை நிலையங்களில் உயிருடன் கிலோ ரூ.103 ஆகவும், தோலுடன் கறி கிலோ ரூ.135 ஆகவும், தோல் நீக்கி கறி கிலோ ரூ.160 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. 10 நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் (22ம் தேதி) பண்ணை விலை உயிருடன் கிலோ ரூ.83 ஆகவும், சில்லரை விற்பனை நிலையங்களில் உயிருடன் கிலோ ரூ.97 ஆகவும், தோலுடன் கறி கிலோ ரூ.130 ஆகவும், தோல் நீக்கி கறி கிலோ ரூ.150 ஆகவும் சரிந்தது.அதைத்தொடர்ந்து நேற்று(23ம் தேதி) பண்ணை விலை ரூ.79 ஆகவும், சில்லரை விற்பனையில் உயிருடன் ரூ.94 ஆகவும், தோலுடன் ரூ.125 ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.145 ஆகவும் சரிந்தது.அதிகளவிலான கறிக்கோழி நுகர்வு சீராகி வருகிறது. இதனால் தற்போதைய விலை வீழ்ச்சியடைந்து வருகிறது, என்கின்றனர் உற்பத்தியாளர்கள்.